மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# சங்க இலக்கியத்தில் சமூகமும் அறமும்

மூ. சிந்து
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கற்பகம் பல்கலைக்கழகம்
ஈச்சநாரி

சங்க இலக்கியத்தைப் பொருத்தவரையில் புலவர்கள் தாங்கள் கண்ட காட்சிகளையும் பெற்ற அனுபவங்களையும் உள்ளது உள்ளவாறு படம் பிடித்துக் காட்டிச் சென்றுள்ளனர். சங்க இலக்கியங்கள் என்று கூறப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சங்க இலக்கியங்கள் பொருளும், அருளும்கொண்ட மன்னர்கள், பொருளற்ற கலையுணர்வுகொண்ட புலவர்களை வரவேற்று இன்முகம்காட்டி விருந்திட்டுப் பொருள் கொடுத்து வறண்ட வாழ்வை வளமாக்கிய வரலாற்றை எடுத்துக்காட்டுகின்றன. கொடை, வீரம், காதல், புகழ், கல்வி ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவையே சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க காலச் சமுதாயத்தில் தமிழர் வாழ்ந்த வாழ்க்கை, கொண்ட கொள்கை இவற்றின் கருவூலமாகத் திகழ்வது சங்கப் பாடல்களாகும்.

**அறம்**

அறம் – இல்லறம், துறவறம் என இருவகை. இல்லறம் – கொடுத்தலும், அளித்தலும், கோடலும், இன்மையும், ஒழுக்கமும், புணர்தலும், புணர்ந்தோரைப் பேணுதலுமாம். துறவறம் – துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும் அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும் பிறவுமாம் என்று அறத்திற்கு 'அபிதான சிந்தாமணி' பொருள் கூறுகிறது.

தமிழ் மொழி அகராதி 'அறம்' என்ற சொல்லுக்கு அறம், கையறம், தருமம், நீர்மை, பெரியோர் இயல்பில் ஒன்று என்று பொருள் சொல்கிறது.

**அறத்தின் அடிப்படை**

ஒருவனுடைய நினைவு சொல் செயல்களின் தீமையை அறுப்பதே அறம் என்னும் சொல்லுக்குப் பொருளாகப் பெறப்படும். ஒருவன் சொல்வனவும் செய்வனவும் எல்லாம் அவன் எண்ணும் எண்ணத்தின் வழியாகவேயன்றி வேறு வகையில் நடைபெறுதல் இயலாது என்று மறைமலையடிகள் அறத்திற்கு விளக்கம் கூறியுள்ளார்.

**வள்ளுவர் கண்ட அறம்**

அறம் எனப்படுவது ஒருவனது சொல், செயல்களின் உள்ளே சினத்துக் கிளம்பிய பொல்லாங்கினை அறுத்து அகற்றுவதற்கு முன் அவற்றிற்கு முதலான நினைவின்கண் சினங்கொண்ட தீய எண்ணத்தை அறுத்துக் களைவதாகும் என்னும் உண்மை புலனாகிறது.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற”

என்ற குறளில் எல்லா எண்ணங்களும் தோன்றுவதற்கு நிலைக்களமான ஒருவனது மனம் குற்றமின்றித் தூயதாக இருக்குமாறு ஒருவன் செய்துகொள்வதே அவனுக்கு அறமாகும். மனத்தூய்மையின்றி அவன் தன் சொல்லாலும் செயலாலும் அறம்போல செய்வன எல்லாம் அறமாதல் சிறிதுமில்லை என்று வள்ளுவர் கூறுகிறார்.

**சங்கச் சமூக நிலைப்பாடு**

சங்ககாலத் தமிழகம் கோனாட்சியைத் (கோ–அரசன்) தவிரப் பிறவகை ஆட்சியை அறிந்திருக்கவில்லை. சமூகத்தின் தலைவனாக மன்னனையே சங்க இலக்கியம் குறிப்பிடுக்கிறது.

“மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்”

என்பது மன்னனின் தலைமையின்றிச் சமுதாயம் சீராக இயங்க முடியாது எனக் கண்டு கொண்டதன் விளைவாகத் தோன்றிய கூற்றாகும்.

மன்னனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவானது தாய், தந்தைக்கும் பிள்ளைகட்கும் உள்ள உறவாகக் கருதியதைக் காணமுடிகிறது. புலவரும், மறக்குடி பெண்டிரும், மன்னனை 'எந்தை' எனக் குறிப்பிடுகின்றனர். மன்னன் இல்லாத நாடு அதன் வளத்தையும் சிறப்பையும் இழந்துபோகும்.

“அனையன் என்னாது, அத்தக் கோனை,

நினையாக் கூற்றம் இன்உயிர் உய்த்தன்று” (புறம் – 221)

தலைவனை இழந்து மக்கள் அடையும் துயரினை மேற்குறிப்பிட்ட புறநானூற்றுப் பாடல் வரிகள் பதிவு செய்கின்றன.

மன்னனை இழந்த நாடும் நாட்டுமக்களும் துன்பப்படுவது, தாயை இழந்த குழந்தைத் துன்பப்படுவதற்க்கு உவமையாகக் கூறும் நிலை காணப்படுகிறது.

“தாய்இல் தூவாக் குழவி போல,

ஓவாது கூஉம், நின் உடற்றியோர் நாடே”

என்னும் புறநானூற்றுப் பாடலில் மன்னனைத் தாயாகவும், தந்தையாகவும் எண்ணி பண்டைத் தமிழ் மக்கள் வாழ்ந்தமை புலனாகிறது.

குழந்தைகள் தாயையும், தந்தையுமே நம்பி வாழ்வது போலக் குடிமக்கள் மன்னனை நம்பி வாழக்கூடியவர்கள் இருந்தமையை.

"என் நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது" (புறம் – 72)

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள், மன்னன் தாள் நிழலில் குடிகள் வாழ்வதைச் சுட்டுகின்றது.

குழந்தைகளின் நலனைக் காத்தல், அவர்கள் தவறு செய்யும்பொழுது கண்டித்துத் திருத்துதல் ஆகியவை பெற்றோரின் கடமைகளாகும். இங்ஙனம் மன்னனும் தன் குடிகளின் நலனைக் காத்தலோடு, தவறு செய்யும்பொழுது ஒறுத்துத் திருத்தும் உரிமையடைவனாக விளங்கினான் என்பது புலனாகிறது.

**மன்னனின் சிறப்பு**

'இறைவன்' என்னும் சொல்லுக்குக் கடவுள், மன்னன் என்னும் இரு பொருள்களும் வழங்கியிருக்க வேண்டும். சங்க இலக்கியத்தில் இச்சொல் மன்னனையே குறித்தது.

"இறைவன் தாட்கு" (புறம் , 18)

"இறைவன் ஆகலின்" (புறம் . 152)

"அவன் எம் இறைவன்" (புறம் . 316)

புறநானூற்றுப் பாடல் வரிகளில் வரும் இறைவன் என்னும் சொல் மன்னனைச் சுட்டுவது புலனாகிறது.

மக்களின் உயிரையையும், உடைமைகளையும், பிற நலன்களையும் காத்தலே மன்னனின் தலையாய கடனாகக் கருதப்பட்டது. மன்னர்கள் நாட்டு மக்களின் நல்வாழ்வும் வளமுமே தங்கள் குறிக்கோள் என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டிருந்தனர்.

**முடிவுரை**

சங்ககாலச் சமுதாய இலக்கியங்கள் அறத்தை வலியுறுத்தவதன் மூலம் மக்களின் அறவாழ்க்கைக்கு வழிகாட்டுவதாய் அமைகின்றன. கொடை, வீரம், காதல் என்ற முப்பொருளை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவை சங்க இலக்கியங்கள் ஆகும். பண்டைத் தமிழகத்தில் கோனாட்சி வழக்கினில் இருந்தது. பண்டைத் தமிழ் மன்னர் முழு அதிகாரம் பெற்றிருந்தனர்; கடமையுணர்ந்த காவலராய் விளங்கினர். சங்கச் சமூகத்தில் அறநெறிக் கொள்கைகள் சிறப்புடன் விளங்கியமையை அறியமுடிகிறது.